மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 52/2016 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | சண்முகராஜ் | நாள் | 25.03.2025 |
| தகப்பனார் பெயர் | சந்திரசேகரன் | | |

பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

11) ச.எண்.226/8 ஐ பொறுத்து ஜலகண்டாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் பெயரில் பட்டாவோ அல்லது வேறு அனுபவத்திலுள்ளதை காண்பிக்க ஏதேனும் ஆவணங்களை காண்பித்துள்ளேனா என்றால், இல்லை. 03.01.2008ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து ஏதேனும் பட்டா மாற்றங்கள் நடந்துள்ளதா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. அதேபோல், ச.எண்.226/8 தற்போது வருவாய் ஆவணங்களில் வண்டிப்பாதையாக உள்ளது என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

12) மேற்படி ஜலகண்டாபுரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அளிக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்திற்கு மூல ஆவணமாக எந்தெந்த ஆவணங்கள் உள்ளது என்பதை நான் எப்போதாவது பரிசீலித்துள்ளேனா என்றால், பரிசீலித்தேன். மேற்படி J.U.ராமலிங்கத்தின் முன் விற்பனையாளர் சரோஜினி என்பவரது பெயரிலுள்ள கிரய பத்திரத்தை பரிசீலித்துள்ளேன். மேற்படி நான் பரிசீலித்ததாக சொல்லும் சரோஜினியின் பெயரிலுள்ள கிரய ஆவணம் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தற்போது சரியாக எனக்கு நினைவில்லை.

13) மேற்படி J.U.ராமலிங்கத்தின் முன் விற்பனையாளர் சரோஜினி பெயரிலோ, அல்லது என் முன் விற்பனையாளர் J.U.ராமலிங்கத்தின் பெயரிலோ தாவா சொத்திற்குரிய பட்டாவோ அல்லது அனுபவத்தை காண்பிக்கும் ஆவணங்கள் எதையேனும் பார்த்துள்ளேனா என்றால், இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் தான் மேற்படி ஜலகண்டாபுரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு

J.U. ராமலிங்கத்தால் அளிக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் என்றால், சரிதான். மேற்படி ஆவணத்தில் சொத்து விவரத்தில் ச.எண்.277/1 ற்கு, புதிய நத்தம் ச.எண்.361/3 என காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

14) மேற்படி சொத்து விவரத்திலேயே ச.எண்.226/8 ல் உள்ள நிலத்தை 2 வது அயிட்டமாக என் முன்விற்பனையாளர் காண்பித்துள்ளார் என்றால், சரிதான். ச.எண்.361/3 ன் சச்குபந்தி விவரங்களாக மேற்படி ஆவணத்தில் 2 வது அயிட்ட சொத்தாக ச.எண்.226/8 க்கு கிழபுறம் உள்ள பகுதியை காண்பித்துள்ளார் என்றால், சரிதான். ச.எண்.361/3 நத்தம் நிலம் என காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.361/3 ஐ பொறுத்து மேற்படி J.U.ராமலிங்கத்தின் பெயரிலோ, அவரது முன் விற்பனையாளர் சரோஜினி பெயரிலோ ஏதேனும் பட்டாவோ அல்லது வேறு உரிமை ஆவணங்களோ உள்ளதாக மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

15) மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1 வது அயிட்ட சொத்துக்கு சேர்த்து கிழமேல் அடி இருபுறமும் 20 அடியும், தென்வடலடி இருபுறமும் 60 அடி ஆக 1200 சதுரடி நிலம் காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி 1200 சதுரடி நிலம் தற்போது இவ்வழக்கில் பிரச்சனைக்குரிய சொத்து அல்ல என்றால், சரிதான். மேற்படி 1200 சதுரடி நிலம் அரசாங்கத்திற்கு சொந்தமான நத்தம் புறம்போக்கு நிலம் என்பதால், மேற்படி யாருடைய அனுபவத்திலும் இல்லாத அரசாங்கத்தின் நிலத்தையே அரசாங்கத்திற்கு தானமாக கொடுக்க என் முன்விற்பனையாளர் J.U.ராமலிங்கத்திற்கு உரிமை இல்லை என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. ஆனால், அவருடைய நிலம் என கூறி தான் அவர் அதை எழுதிக்கொடுத்துள்ளார்.

16) மேற்படி 1200 சதுரடி நிலத்தை பொறுத்து தனிப்பட்ட நபரின் அனுபவத்தில் இருந்ததாகவோ, 6 ம் பிரதிவாதியின் பெயரில் தற்போது உள்ளதாகவோ இவ்வழக்கில் நான் எவ்வித வருவாய் ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால், இல்லை.

அவ்வாறு நான் சொல்வது போல் மேற்படி சொத்தானது பேரூராட்சிக்கு அளிக்கப்பட்டு அதில் பேரூராட்சியால் சாலை அமைக்கப்பட்டிருந்தால், அது தொடர்பாக அடங்கல் கணக்கில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மேற்படி பகுதி சாலை என காண்பிக்கப்பட்டிருக்கும் என்றால், வழக்கு நடப்பதால், பதிவுகள் எதுவும் செய்யப்படவில்லை.

17) மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள கிணறு தனியார் கிணறா அல்லது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டதா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் 2 வது தாக்காக காண்பிக்கப்பட்டுள்ள ச.எண்.226/8 ஆனது பட்டா நிலம் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி ச.எண்.226/8 தற்போது யார் யார் பெயரில் உள்ளது என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. என் வழக்குரை சொத்து விவரத்தில் வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு கிழமேல் தென்வடலடி அளவுகள் குறிப்பிட்டு சொத்தின் அளவுகள் எதும் காட்டப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

18) என் வழக்குரை சொத்துவிவரத்தில் காட்டப்பட்டுள்ள பாதை எந்தெந்த சர்வே எண்ணில், எவ்வளவு நீள, அகலத்தில் அமைந்துள்ளது என சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள மூல ஆவணங்களை நான் பரிசீலித்துள்ளேனா என்றால், இல்லை. நான் என் சொத்தை கிரயம் பெற்றபோதும் மேற்படி மூல ஆவணங்களின் நகல்களை என் முன் விற்பனையாளர் என்னிடம் கொடுக்கவில்லை என்றால், சரிதான். உண்மையில் மேற்படி J.U.ராமலிங்கம் தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டிருந்தால், அது தொடர்பான முன் ஆவணங்களை என்னிடம் அளித்திருப்பார் என்றாலும், அவ்வாறு மேற்படி சொத்தை பொறுத்து எவ்வித உரிமையும் இல்லாததால்தான் தாவா சொத்திற்கு தொடர்பற்ற பல ஆவணங்களை என் கிரய பத்திரத்தில் குறிப்பிட்டு, இல்லாத தடவழியை காட்டி மோசடியாக எனக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், சரியல்ல.

19) ச.எண்.227/1க்கு புதிய சர்வே எண்.226/8 இதன் கிழக்கு புறம் யூனியன் கழிவு நீர் சாக்கடை அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி சாக்கடைக்கு மேற்குபுறம் தான் நான் கிரயம் பெற்ற நிலம் உள்ளது என்றால், சரிதான். மேற்படி சாக்கடையை ஒட்டி மேற்குபுறமாகவும், கிழமேல் ரோட்டிற்கு தெற்காகவும் நஞ்சுண்டன், விஸ்வநாதன் ஆகியோரது நிலம் உள்ளது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 புகைப்படத்தில் யூனியன் சாக்கடைக்கு கிழக்குபுறம் அமைந்துள்ள நிலம் யார் பெயரில் உள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. ஆனால், மேற்படி நிலத்தை தான் J.U.ராமலிங்கம் தானசெட்டில்மெண்ட் அளித்துள்ளார்.

20) ச.எண்.226/8 ஆனது, 1 முதல் 5 பிரதிவாதிகளின் மூதாதையர் சொத்து என்றாலும், மேற்படி நிலத்தை பொறுத்து மேற்படி பிரதிவாதிகளின் முன்னோர்கள் பெயரிலும், பின்னிட்டு, பிரதிவாதிகள் பெயரிலும் பட்டா உள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. அதனால், 1 முதல் 5 பிரதிவாதிகளின் பட்டா நிலம் என்பதால்தான் நான் மேற்படி நிலம் தொடர்பாக எவ்வித வருவாய் ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. ச.எண்.226/8A ஆனது, பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலம் என்பதால், மேற்படி நிலத்தை பொறுத்து, உண்மையான உரிமையாளர்களான பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் கோர இயலாது என்றாலும், சரியல்ல.

21) பிரதிவாதிகளின் நிலத்தை அபகரிக்கவேண்டி, மோசடியாக ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி நிலத்தில் பாதை உள்ளதாக கூறி, தற்போது இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. அதனால், பிரதிவாதிகளுக்கு எதிராக அவர்களது பட்டா நிலத்தில் நான் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றாலும், பிரதிவாதிகள் நிலத்தில் மோசடி ஆவணத்தின் அடிப்படையில் அத்துமீறி நுழைய எனக்கு உரிமை இல்லை என்றாலும், சரியல்ல.

22) இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் ச.எண்.226/8A ற்கு தொடர்புடையது அல்ல என்றால், சரியல்ல. அதனால் பிரதிவாதிகளுக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.